Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

நடுநிலை நாளிதழ்

PRGI NO: TNBIL/25/A3556

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 • இதழ் Issue : 26 • புதன்கிழமை Wednesday • 26.11.2025 • பக்கங்கள் Pages:4 • ₹6 • ஈரோடு Erode

## ரூ.208.50 கோடியில் உருவாக்கப்பட்டுள்ள கோவை செம்மொழி பூங்கா:

# “கலைஞர் வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டேன்..”

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்







கோவை:

கோவையின் புதிய அடையாளமாக,ரூ.208.50 கோடியில் உருவாக்கப்பட்டுள்ள செம்மொழி பூங்காவை (நவ.,25) தமிழக முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

கோவையில் 45 ஏக்கரில் ரூ.208.50 கோடி ரூபாயில் செம்மொழி பூங்கா அமைக்கப்பட்டு உள்ளது. இந்த செம்மொழி பூங்கா,தமிழகத்திலேயே வேறெங்கும் இல்லாத வகையில், அரிய வகை தாவரங்கள், செடி, கொடிகள், மர வகைகளுடன் உருவாகியிருக்கிறது. பூங்காவை சுற்றிலும் 2.2 கி.மீ.,துாரத்துக்கு நடைபயிற்சி செல்லும் வகையில், சுற்றுப்பாதை உருவாக்கப்பட்டுள்ளது. இயற்கை பசுமை சுற்றுலா தலமாக உருவாக்கப்பட்டுள்ள பூங்காவை இன்று முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

அவர், கல்வெட்டு மற்றும் செயற்கை மலைக்குன்றை திறந்து வைத்து, கடையேழு வள்ளல்களின் சிலைகளை பார்வையிட்டார். பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள வசதிகளை முதல்வர் ஸ்டாலின் சுற்றிப்பார்த்தார். திறந்தவெளி அரங்கத்தில் கலைநிகழ்ச்சி நடந்தது. பள்ளி குழந்தைகள் மற்றும் வி.ஐ.பி.,களுடன் முதல்வர் ஸ்டாலின் கலந்துரையாடினார்.

கடந்த கால வரலாறு

* கோவையில் 2010ல் நடந்த உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில், அன்றைய முதல்வர் கருணாநிதி, காந்திபுரம் மத்திய சிறையை வேறிடத்துக்கு மாற்றி விட்டு, 'செம்மொழி பூங்கா' அமைக்கப்படும் என அறிவித்தார். உடனடியாக, நுழைவாயிலில் போர்டு வைக்கப்பட்டது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

* 2021ல் தி.மு.க., ஆட்சிக்கு வந்ததும் உயிரூட்டப்பட்டது. 2021,நவ.,22ல் கோவை வ.உ.சி.,மைதானத்தில் நடந்த அரசு விழாவில் பங்கேற்ற முதல்வர், இரண்டு கட்டமாக செம்மொழி பூங்கா அமைக்கப்படும் என அறிவித்தார்.

* அதன்படி, மொத்தமுள்ள 165 ஏக்கர் பரப்பளவில் முதல்கட்டமாக 45 ஏக்கரில் பூங்கா உருவாக்க முடிவெடுக்கப்பட்டது. 2023 டிச., 18ல், முதல்வர் ஸ்டாலின் அடிக்கல் நட்டு துவக்கி வைத்தார். 90 சதவீத பணிகள் முடிக்கப்பட்டதை தொடர்ந்து, இன்று திறந்து வைத்தார். 208.50 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

சிறப்புகள் என்ன?

* செம்மொழி வனம், மூலிகை வனம், மகரந்த தோட்டம், பாலைவனத்தோட்டம், மூங்கில் தோட்டம்,ரோஜா தோட்டம் என, 23 விதமான தோட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஜெர்மன் தொழில்நுட்பத்தில் மழை நீர் வடிகால் அமைப்பு 2 கி.மீ., நீளத்துக்கு அமைக்கப்பட்டிருக்கிறது.

* சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள செண்பக மரம், கல் இலவு, மிளகு மரம், கடல் திராட்சை, திருவோட்டு மரம், கலிபுடா, வரிகமுகு, மலைபூவரசு எலிச்சுழி, குங்குமம் மரம் ஆகியவை உள்ளன. மரங்கள் மற்றும் செடிகளுடன், 2000–க்கும் மேற்பட்ட ரோஜா வகைகள் ரோஜா தோட்டத்தில் நடப்பட்டுள்ளன. கடையேழு வள்ளல்களின் கற்சிலைகளும் நிறுவப்பட்டுள்ளன.

மரங்கள் மற்றும் தாவரங்களை பற்றி அறியும் வகையில், 'க்யூஆர்' கோடு மற்றும் 'பார்' கோடு வசதியுடன் கூடிய பெயர் பலகை வைக்கப்படும். 'க்யூஆர்' கோடு ஸ்கேன் செய்தால், அதன் சிறப்பை ஒலி வடிவில் கேட்கலாம்.


* நுழைவுச்சீட்டு வழங்குமிடம் மற்றும் அனுபவ மைய கட்டடம். 500 பேர் அமரக்கூடிய திறந்தவெளி அரங்கம், பணியாளர் அறை. உணவகம். ஒப்பனை அறை. சில்லறை விற்பனை நிலையம், செயற்கை நீர்வீழ்ச்சி ஆகியவையும் அமைந்துள்ளன.

* பழங்கால தமிழர்கள் பயன்படுத்திய பொருள்களுடன் கூடிய அருங்காட்சியகம் மற்றும் தாவரவியல் அருங்காட்சியகம், படிப்பகம், சக்கர நாற்காலிகள், பேட்டரி வாகனங்கள் போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

உடற்பயிற்சி கூடம் (ஜிம்)

உலகத் தர உடற்பயிற்சி கருவிகளுடன் கூடிய திறந்தவெளி உடற்பயிற்சி கூடம். 4,000 சதுர அடி பரப்பளவில் டெராரியம் என்ற உள்வன மாதிரி காட்சியமைப்பு , குழந்தைகளுக்கு 14,000 சதுர அடி விளையாட்டு திடல். உள்விளையாட்டு அறை. மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு திடல் போன்ற பொழுதுபோக்கு வசதிகளும் உண்டு.

## கனமழை எச்சரிக்கை: மாவட்ட ஆட்சியர்களுக்கு அரசு முக்கிய அறிவுறுத்தல்!



கனமழை எச்சரிக்கையையடுத்து தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

குமரிக்கடல் மற்றும் இலங்கைக்கு தெற்கே நிலவும் காற்றழுத்தத் தாழ்வு காரணமாக தமிழ்நாட்டின் டெல்டா மற்றும் கடலோர மாவட்டங்களில் நவ. 28 முதல் நவ. 30 வரை கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

"24–11–25 அன்று குமரிக்கடல்மற்றும்அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவிய வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று 25.11.25 இலங்கைக்கு தெற்கே வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி உருவாகி உள்ளது. இத்தாழ்வுபகுதி மேலும் வலுவடைந்து தமிழ்நாட்டின் கடலோரமாக வடக்கு நோக்கி நகரக் கூடும் என்பதால் டெல்டா மாவட்டங்கள், கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் வரும் 28.11.25 முதல் 30.11.25 வரை கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும்.

எனவே, தமிழ்நாடு அரசு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர்களை அறிவுறுத்தியுள்ளது.

மேலும்வருவாய்நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் முனைவர் எம். சாய்குமார் இன்று (25.11.2025) சென்னை எழிலகத்தில் உள்ள ஒருங்கிணைந்தவெள்ள மேலாண்மை மையத்தில் இருந்து காணொலி காட்சி மூலம் கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர்களுடன் பேரிடரை எதிர்கொள்ள மேற்கொண்டுள்ள முன்னெச்சரிக்கைகள் மற்றும் ஆயத்தநிலை குறித்து ஆய்வு செய்தார்கள். இதில், நிவாரணமையங்களைதயார் நிலையில் வைத்துகொள்ளுமாறும் நேரடி கொள்முதல் மையங்களின் இருந்து அனைத்து நெல் மூட்டைகளையும் பாதுகாப்பாக நகர்வு செய்யுமாறும் கூடுதல் மின்கம்பங்கள், மின்வடங்கள் தயார்நிலையில் வைக்குமாறும் மீட்புப் படையினருடன் தயார்நிலை குறித்து ஆய்வு செய்யுமாறும் அறிவுரை வழங்கினார்கள்.

வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையின் மூன்று அணியினர் நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணியிலும், இரண்டு அணியினர் கடலூர் மாவட்டம் கடலூர் நகராட்சிக்கு அருகிலும் மீட்பு மற்றும் நிவாரண பணிக்காக முன்னெச்சரிக்கையாக நிலை நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும், தேசிய பேரிடர் மீட்பு படையின் ஒரு அணி 26–11–2025 முதல் விழுப்புரம் மாவட்டத்தில் நிலைநிறுத்தப்பட உள்ளது.

கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ளதால், மாநில அவசர கால செயல்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அவசர கால செயல்பாட்டு மையம்மூலம்நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



### மக்களின் நீண்ட நாள் கோரிக்கை:

# பாலாற்றில் இருந்து குடிநீர் தண்ணீர் வழங்க பணிகள் துவக்கம்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் ஒன்றியம் ஜானகிபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட ஜானகிபுரம் மற்றும் தண்டலம் கிராமத்தில் சுமார் 1800 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர் இப்பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு நீண்ட நாட்களாக இருந்து வருகிறது அருகில் தொழிற்சாலைகளின் கழிவு நீர் ஓடையில் கலந்து கிணறு மற்றும் போரில் கலந்து விடுகின்றன இதனால் தண்ணீர் மாசடைந்து பயன்படுத்த முடியாத சூழல் ஏற்பட்டு குடி தண்ணீருக்கு பொதுமக்கள் சிரமப்பட்டு வந்த நிலையில் 38.லட்சம் மதிப்பீட்டில் எல்லன்புரம் பாற்றில் இருந்து இரண்டு ஆழ் துளை கிணறு போர் மூலம் ஜானகிபுரத்தில் உள்ள 2 லட்சம் குடிநீர் தொட்டிகளுக்கு கொண்டு வரப்பட்டு அனைத்து மக்களுக்கும் பயன்பெறும் வகையில் பணிகள் இன்று தொடங்கப்பட்டது இதில் திமுக ஒன்றிய செயலாளர் சத்ய சாய் மாவட்ட குழு தலைவர் செம்பருத்தி துர்கேஷ். ஊராட்சி மன்ற தலைவர் பரிமளா ராஜா. துணைத் தலைவர் ரமேஷ் மற்றும் வார்டு உறுப்பினர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்



### செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த

# அனந்தமங்கலம் மேல்நிலைப் பள்ளியில் ஸ்மார்ட் வகுப்பறை துவக்கம்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த.



அச்சரப்பாக்கம் கல்வி வட்டத்திற்கு உட்பட்ட அனந்தமங்கலத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளியில் ஸ்மார்ட் வகுப்பறை துவங்கப்பட்டது.

அனந்தமங்கலத்தில் உள்ள அகத்தீஸ்வரர் கோவிலின் அகவன் அறக்கட்டளையின் சார்பாக, அனந்தமங்கலம் பள்ளியில் , ஸ்மார்ட் வகுப்பறை ஏற்படுத்த, 6 லட்சம் ரூபாய் மதிப்பில், பள்ளியில் இரண்டு வகுப்பறை கூடிய கட்டடம் புதிதாக வர்ணம் பூசப்பட்டது.

பின், தரைப்பகுதியில் டைல்ஸ்கற்கள் பதிக்கப்பட்டது. மேலும், மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்தும் வகையில், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய, ஏ.ஐ., டெக்னாலஜி மூலமாக மாணவ, மாணவியர் கல்வி பயிலும் வகையில் ஸ்மார் வகுப்பறை துவங்கட்டது.

இதனை, அகவன் அறக்கட்டளையின் மூலமாக, கிஷோர் அவர்களின் பிறந்தநாளை ஒட்டி, ஸ்மார்ட் வகுப்பறை துவங்கப்பட்டது. இதில், ரங்கநாதன், ராஜேந்திரன், பள்ளியின் தலைமை ஆசிரியர் ராஜேஷ்குமார், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கிராமபொதுமக்கள் பங்கேற்றனர். இதில், அகவன் அறக்கட்டளையின் கிஷோர் அவர்கள் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார். அதில், சமூகத்தில் ஒழுக்கத்துடன் கூடிய கல்வி மிக முக்கியமானது. கல்வி ஒன்றே மனிதனை சிறந்த அறிவாளியாக்கும். இறை சிந்தனையுடன் கூடிய கல்வி முன்னேற்றத்தை ஏற்படுத்தும், என்று, மாணவ, மாணவியருக்கு அறிவுரை வழங்கினார்.

இந்நிகழ்வில், பள்ளியில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

மேலும், மாணவ, மாணவியருக்கு இனிப்புகள் மற்றும் உணவு பரிமாறப்பட்டது.

### திருப்போரூர் அடுத்த கேளம்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில்

# SIR நிரப்பும் பணி தீவிரம் முன்னாள் MLA இதயவர்மன் ஆய்வு

வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலுக்கான (SIR) வாக்காளர் படிவம் சீர்திருத்தம் வேண்டுமென தமிழகஅரசுஅறிவிப்பை தொடர்ந்து தமிழக முழுவதும் அரசு அலுவலககட்டிடங்களில் நடைபெற்று வருகிறது,



செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அடுத்த கேளம்பாக்கம் ஊராட்சிமன்றஅலுவலகத்தில் கேளம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ராணி எல்லப்பன் மற்றும், திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் எக்ஸ்பிரஸ் எல்லப்பன்,ஏற்பாட்டில் SIR படிவம் நிரப்பும் முகாம் பணி நடைபெற்றது,

இந்த முகாமினை திருப்போரூர் ஒன்றிய ஒன்றிய பெருந்தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான இதயவர்மன், பங்கேற்று ஆய்வுசெய்து பொதுமக்களின் குறைகளை கேட்டு அறிந்தார்,



### திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

# கார்த்திகை தீப திருவிழாவிற்கான கொடியேற்றம் நடைபெற்றது

## ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர்

திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கொண்டாடப்படும் விழாக்களில் கார்த்திகை தீபத் திருவிழா சிறப்பு வாய்ந்தது ஆகும். கார்த்திகை மாதம் 10 நாட்கள் நடைபெறும் இந்த திருவிழாவிற்கான கொடியேற்றம் இன்று காலை சரியாக 10.40 மணிக்கு மேல் தொடங்கி நடந்தது. உற்சவர் சன்னதியில் சுப்பிரமணிய சுவாமி- தெய்வானைக்கு பால், சந்தனம், இளநீர், திரவிய பொடி உள்ளிட்ட 16 வகையான பொருட்களால் சிறப்பு அபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து சிறப்பு அலங்காரத்தில் சுப்பிரமணியசாமி தெய்வானையுடன் சிம்மாசனத்தில் கோவில் கம்பத்தடி மண்டபத்தில் எழுந்தருளினார்.

அங்கு சுப்பிரமணிய சுவாமி- தெய்வானை முன்னிலையில் தங்க முலாம் பூசப்பட்ட கொடி கம்பத்தில் சந்தனம், பால், பன்னீர்,இளநீர் உள்ளிட்ட சிறப்பு அபிசேகம் செய்யப்பட்டு தர்ப்பை புல், மாவிலை, பூ மாலை கொண்டு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு 10.55 மணிக்கு கார்த்திகை தீப திருவிழாவிற்கான கொடி ஏற்றப்பட்டது. விழாவையொட்டி சுப்பிரமணிய சுவாமி- தெய்வானையுடன் தினமும் காலையில் தங்க சப்பரத்திலும், மாலையில் தங்கமயில், தங்க குதிரை வாகனம், வெள்ளி பூத வாகனம்,அன்ன வாகனம் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்கள்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியாகவருகிறடிச.2 ந்தேதி இரவு 7.05 மணிக்கு சுப்ரமணிய சுவாமிக்கு வைர கிரீடம், நவரத்தினங்கள் பதித்த செங்கோல் வழங்கி பட்டாபிஷேகம் நடைபெறும். விழாவின்முக்கியநிகழ்ச்சியாகடிச.3 ந்தேதி காலை 7.05 மணிக்கு கார்த்திகை தேரோட்டம் நடைபெறும். அன்று மாலை 6 மணிக்கு கோயிலில்பாலதீபம்ஏற்றி மலைமேல்மகாதீபம்ஏற்றப்படுகிறது. அதன்பிறகு இரவு 7.30 மணி அளவில் 16 கால் மண்டபம் அருகில் சொக்கப்பான் கொளுத்தப்படுகிறது.

# ஈரோடு மாவட்டத்தில் 2 நாட்கள் ட்ரோன்கள் பறக்கத்தடை




ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு-

தமிழ்நாடு முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் ஈரோடு மாவட்டத்திற்கு 25.11.2025 மற்றும் 26.11.2025 ஆகிய நாட்களில் வருகை புரிந்து அரசு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார். இதனையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் செல்லும் வழி, ஈரோடு காளிங்கராயன் இல்லம், அரசு நிகழ்ச்சி நடைபெறும் இடங்களான மொடக்குறிச்சி வட்டம், ஜெயராமபுரத்தில் அமைந்துள்ள சுதந்திர போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அரங்கம், ஓடாநிலையில் அமைந்துள்ள தீரன் சின்னமலை நினைவகம், சோலார் புதிய பேருந்து நிலையம் மற்றும் பால்வளத்தந்தை சி.கு.பரமசிவன் சிலை திறப்பிடமான சித்தோடு ஆகிய இடங்களில் ட்ரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான்வழி வாகனங்கள் பறக்க தடை விதிக்கப்படுகிறது. தடையை மீறி ட்ரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான்வழி வாகனங்கள் பறக்கவிடும் நபர்கள் மீது காவல்துறை மூலம் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.






### உளுந்தூர்பேட்டை அருகே புகைப்பட்டி கிராமத்தில்

# மழை நீரில் அப்பகுதி இளைஞர்கள் வலைகளை வைத்து மீன் பிடித்து வருகின்றன



வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து உளுந்தூர்பேட்டை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் இரண்டு நாட்களாக மழை பெய்து வருகிறது இந்த நிலையில் இன்று அதிகாலை தொடங்கி இடைவிடாத பெய்து வரும் கனமழையால் இப்பகுதியில் உள்ள ஏரி குளம் குட்டை உள்ளிட்ட நீர் நிலைகள் நிரம்பி வருகிறது இந்த நிலையில் புகைப்பட்டி கிராமத்தில் உள்ள ஏரிகள் நிரம்பி விவசாய நிலங்களின் வழியாக செல்லும் ஓடையில் மழைநீர் ஆர்ப்பரித்துக் கொண்டு செல்லும்மழைநீரில்அப்பகுதியில்உள்ளஇளைஞர்கள் வலை வைத்து மீன் பிடித்து வருகின்றனர் விறால், செலுத்தி,கெண்டை,வவ்வாமற்றும்பல்வேறுவகையான நாட்டு மீன்களை வலையில் பிடித்து மகிழ்ச்சி அடைந்து வருகின்றனர் ஓடை வழியாக செல்லும் மழைநீரில் இளைஞர்கள் பல்வேறு ரகம் கொண்ட மீன்களைப் பிடித்து மகிழ்ச்சி அடைந்து வருகின்றனர்.



# அச்சிறுப்பாக்கம் அருகே எல்.எண்டத்தூரில் மக்கள் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்

செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அருகேஉள்ளஎல்.எண்டத்தூர் அரசினர் மேல்நிலை பள்ளயில் மருத்துவம் மற்றும் மக்கள் நல வாழ்வுத்துறை நடத்தும் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் நடைபெற்றது.




தமிழக முழுவதும் பொதுமக்களின் நலன் கருதி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆணைக்கிணங்க பல்வேறு பகுதிகளில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக காஞ்சி தெற்கு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம் எல்.எண்டத்தூரில் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினரும் காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளருமான கா.சுந்தர் ஆலோசனைப்படி காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஒரத்தி கே.கண்ணன் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜி.தம்பு ஆகியோரின் முன்னிலையில் எல்.எண்டத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட சுகாதார அலுவலர் பானுமதி, மாவட்ட கவுன்சிலர்கள் டி.ஆர். நாராயணன் எஸ்.மாலதி முன்னால் ஒன்றிய பெருந்தலைவர் மாவட்ட கவுன்சிலர். விஜயலட்சுமி கருணாகரன் ஒன்றிய அவை தலைவர் ஜி.சிவபெருமான், அச்சிறுப்பாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சீனிவாசன், ஜெயக்குமார், வட்டார மருத்துவர் சுரேஷ், சுகாதார ஆய்வாளர் கன்னியப்பன் எல்.எண்டத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் யமுனா குப்புசாமி, எல். எண்டத்தூர் கிளை கழக செயலாளர்கள் எஸ். பாண்டுரங்கன், டி.வேலாயுதம், ஆர்.பரமசிவம், எஸ்.குமார், எம். கே.மஞ்சுநாதன், ஊராட்சி செயலர் இரா. நாராயணமூர்த்தி, அச்சிறுப்பாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலக ஒருங்கிணைப்பாளர் ஆர்.ரகுநாதன், உட்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கிராம பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

# கேளம்பாக்கம் ஊராட்சியில் SIR நிரப்பும் பணி தீவிரம் ஒன்றிய பெருந்தலைவர் இதயவர்மன் ஆய்வு

வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலுக்கான (SIR) வாக்காளர் படிவம் சீர்திருத்தம் வேண்டுமென தமிழக அரசு அறிவிப்பை தொடர்ந்து தமிழக முழுவதும் அரசு அலுவலக கட்டிடங்களில் நடைபெற்று வருகிறது



செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அடுத்த கேளம்பாக்கம் ஊராட்சியில் திமுக திருப்போரூர் வடக்கு ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும் மற்றும் ஜோதி நகர் கிளைச் செயலாளருமான அன்பு மற்றும் தனக்கோட்டி அன்பு, ஏற்பாட்டில்,

ஜோதி நகர் பகுதியில் பாகம் எண் 79.80.81.82.83 அனைத்து பகுதிகளிலும் நான்காவது நாளாக கேளம்பாக்கம் காவல் நிலையம் எதிரில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் முகாம் நடைபெற்றது,

இந்த முகாமினை திருப்போரூர் ஒன்றிய ஒன்றிய பெருந்தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான இதயவர்மன், பங்கேற்று ஆய்வு செய்து பொதுமக்களின் குறைகளை கேட்டு அறிந்தார்.

# மானாமதுரையில் உள்ள மூங்கில் ஊரணி தூர்வாரப்பட்டு பராமரிக்கப்படுமா? அல்லது விளையாட்டு மைதானமாக மாற்றப்படுமா? பொதுமக்கள் கேள்வி

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகா மாங்குளம் பஞ்சாயத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள மூங்கில்ஊரணி ஆனாது சரிவர பராமரிப்பின்றியும், தூர்வாரப்படாமலும் சுமார் 10 முதல் 15 வருடங்களுக்குமேல்இருந்து வருகிறது.இதன் காரணமாகசுற்றியுள்ளபகுதிகளில் நிலத்தடி நீர்மட்டத்திற்கு தேவையான போதுமான நீர் ஆதாரம் பாதிப்புக்குள்ளாகி வருகிறது என அப்பகுதி பொதுமக்கள் வேதனை தெரிவித்தனர். மேலும் பொதுமக்களின் அன்றாட பொதுப் பயன்பாடுகளும்பாதிக்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டுஎழுந்துள்ளது.



குறிப்பாக இக்குறிப்பிட்ட ஊரணியானது தூர்வாராமல் இருப்பதால்,பருவமழைகாலங்களில் விரைவாக நிரம்பிய போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக ஊரணி நீர் சாலையில் வெல்லம் போல் ஓடு மிக அபாயகரமான சூழலும் கடந்த காலங்களில் நிலவியதும், ஊரணியை சுற்றி இருந்த கரைகள் அறிக்கப்பட்டு, தார் சாலை மட்டமும் ஊரணி மட்டமும் ஒரே அளவில் தற்போது இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இந்த மூங்கில் ஊரணியை சிறுவர்கள் விளையாட்டு மைதானமாக உபயோகப்படுத்தி வருகின்றனர் என்பது கூடுதல் செய்தி. எனவே முன்னெச்சரிக்கையாக மூங்கில் ஊரணியை தூர்வாரி,சுற்றிலும் கரை அமைத்து, நீர் ஆதாரத்தை அதிகரிக்க மாவட்ட நிர்வாகம், பொதுப்பணித்துறை,நீர்வளத்துறை, உள்ளாட்சி நிர்வாகம் சார்பாக ஊரக வளர்ச்சி மேம்பாட்டு திட்டம் போன்ற ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் நிதி ஏற்படுத்தி பராமரிப்பு பணிகளை உடனடியாக மேற்கொள்ள விவசாயிகள்,பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தினர்.

## ஈரோடு மாவட்டத்திற்கு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க முதலமைச்சர் ஸ்டாலின் வருவதால்

# 26 ஆம் தேதி மட்டும் பின்வரும் போக்குவரத்து மாற்று ஏற்பாடுகள் நடைமுறைபடுத்தப்படவுள்ளது

தேசிய நெடுஞ்சாலை 544 வழியாக சேலத்திலிருந்து கோவை செல்லும் கனரக வாகனங்கள் சங்ககிரியிலிருந்து திருச்செங்கோடு,கொக்கராயன்பேட்டை, திண்டல், பெருந்துறை வழியாக கோவை செல்லவேண்டும்.

தேசிய நெடுஞ்சாலை 544 வழியாக கோவையிலிருந்து சேலம் செல்லும் கனரகவாகனங்கள் காஞ்சிக்கோயில் பிரிவிலிருந்து, கவுந்தப்பாடி, கிருஷ்ணாபுரம் பிரிவு, அம்மன் ஆர்ட்ஸ் கல்லூரி, சித்தோடு பாலத்திலிருந்து (ஈரோடு - சத்திமேம்பாலம்)தேசிய நெடுஞ்சாலையின் இணைப்புச்சாலை, லட்சுமிநகர்வழியாகசேலம் செல்லவேண்டும்.

மேட்டூரிலிருந்து கோவை செல்லும், கனரகவாகனங்கள் அம்மாபேட்டை, அந்தியூர் அத்தாணி, கோபி, குன்னத்தூர், பெருமாநல்லூர் வழியாக கோவை செல்ல வேண்டும்.

காங்கேயத்திலிருந்து அரச்சலூர் வரும் கனரக வாகனங்கள் சென்னிமலை வழியாகவும், கந்தசாமிபாளையத்திலிருந்து ஓடாநிலை வழியாகசெல்லும்வாகனங்கள் எலவனத்தம், வடுகபட்டிபிரிவு வழியாகவும், வெள்ளோட்டிலிருந்து அரச்சலூர் செல்லும் வாகனங்கள் கள்ளுக்கடைமேடு, மாரியம்மன் கோயில், அவல்பூந்துறை, கனகபுரம் வழியாகவும், எழுமாத்தூரிலிருந்துஈரோடு வரும் வாகனங்கள் சந்தைகுட்டை, காசிபட்டி வழியாகவும் மற்றும் சென்னிமலை கைகாட்டி வழியாக அரச்சலூர் வரும் வாகனங்கள் மேற்கு தலவுமலை வழியாக செல்லவேண்டும்.



மேற்கண்ட போக்குவரத்து மாற்றத்தை அனைவரும் கடைபிடிக்கவும், சீரானபோக்குவரத்திற்கு உறுதுணையாக இருக்கவும் ஈரோடு மாவட்ட காவல் துறை சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.




தேவகோட்டை சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு மாவட்டகல்வி அலுவலர்புத்தகங்களைபரிசாக வழங்கி பாராட்டு தெரிவித்தார். பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் தலைமையாசிரியர் லெ . சொக்கலிங்கம் முன்னிலை வகித்தார். தேவகோட்டை மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் செந்தில் குமரன் நிகழ்விற்கு தலைமைதாங்கினார்.பல்வேறுபோட்டிகளில்வெற்றிபெற்றமாணவிகளுக்குபுத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டது.ஆசிரியைகள் முத்துலெட்சுமி, முத்துமீனாள் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர் .

# 211 மருந்துகள் தரமற்றவை: மத்திய அரசு அறிவிப்பு



நாட்டில் விற்கப்படும், அனைத்து வகையான மருந்து, மாத்திரைகளும், மத்திய மற்றும் மாநில மருந்து தரக்கட்டுப்பாட்டு வாரியங்கள் வாயிலாக ஆய்வு செய்யப்படுகின்றன. கடந்த மாதம், ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருந்து மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அதில், காய்ச்சல், சளித்தொற்று, கிருமி தொற்று, ஜீரண மண்டல பாதிப்பு உள்ளிட்டவற்றுக்கு பயன்படுத்தப்படும், 211 மருந்துகள் தரமற்றவையாகவும்,ஐந்து மருந்துகள் போலியானதாகவும் இருந்தது கண்டறியப்பட்டது.

இந்தவிபரங்கள்,மத்திய மருந்து தரக்கட்டுப்பாட்டு வாரியத்தின், https://cdsco.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டு உள்ளன.அவற்றைபொதுமக்கள் பார்வையிடலாம். மேலும்,தரமற்ற மருந்து உற்பத்தி செய்த நிறுவனங்களிடம் விளக்கமும் கேட்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

# ஆன்லைன் விளையாட்டு நிறுவனங்களின் ரூ.523 கோடி டெபாசிட் முடக்கம்; அமலாக்கத்துறை நடவடிக்கை

இந்தியாவில் நிர்தேசா நெட்வொர்க்ஸ் நிறுவனம்,கேம்ஸ்கிராப்ட் டெக்னாலஜிஸ் நிறுவனம் மற்றும் வின்சோ விளையாட்டு நிறுவனம் ஆகியவை ஆன்லைன் விளையாட்டுகளை நடத்தி வந்தன. கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஆன்லைன் விளையாட்டுகளுக்கு மத்திய அரசு தடை விதித்தது.

பணமோசடி வழக்கில் இந்த நிறுவனங்களுக்கு சொந்தமாக குருகிராம், டில்லி மற்றும்பெங்களூரு ஆகிய நகரங்களில் உள்ள அலுவலகங்களில் கடந்த 18 முதல் 22 வரை அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வந்தனர்.ஏலத்திற்குவருகிறது மெஹூல் சோக்சியின் சொத்து: அமலாக்கத்துறை நடவடிக்கை

இது தொடர்பாக அமலாக்கத்துறை வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: வின்சோ நிறுவனம் கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. பயனர்களை, அவர்களுக்கு தெரியாமல் எழுதிவைக்கப்பட்ட மென்பொருளுடன் விளையாட வைத்தது. ஆனால், பயனர்கள் எதிரில் மனிதர்கள் தான் விளையாடி வருகின்றனர் என தவறாக நினைத்து விளையாடினர். இந்த நிறுவனம் இந்தியாவில் மட்டுமல்லாமல் அமெரிக்கா, பிரேசில் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளில் விளையாட்டுகளை நடத்தி வருகிறது. ஆன்லைன் விளையாட்டை மத்திய அரசு தடை செய்தும், பயனர்களுக்கு தர வேண்டிய 43 கோடி ரூபாயை திருப்பித்தராமல் வங்கியில் வைத்து இருந்தது. மோசடியில் கிடைத்ததாக கருதப்படும் 505 கோடி ரூபாயை அமலாக்கத்துறை முடக்கி வைத்துள்ளது.



இந்த பணம் பத்திரங்கள், பிக்சட் டெபாசிட்கள் மற்றும் மியூச்சுவல் பண்டுகளில் முதலீடு செய்யப்பட்டு இருந்தது. கேம்ஸ்கிராப்ட் நிறுவனமும், ஆன்லைன் விளையாட்டு தடை செய்யப்பட்ட பிறகும் பயனர்களுக்கு தர வேண்டிய 30 கோடி ரூபாயை திருப்பித் தராமல் இருந்தது. இந்த நிறுவனம் வங்கியில் டெபாசிட் செய்து வைத்திருந்த 18.57 கோடி ரூபாய் பணம் முடக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்துள்ளது.

# உளுந்தூர்பேட்டை அருகே 3 வயது சிறுமியை அடித்து துன்புறுத்தி சித்ரவதை

## தாய் மற்றும் கள்ளக்காதலன் கைது

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள மணலூர் கிராமத்தைச் சேர்ந்த வெங்கடேசன் வயது 30 என்பவருக்கும் கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே உள்ள குயவன் மேடு கிராமத்தைச் சேர்ந்த சௌந்தர்யா வயது 27 என்பவருக்கும் கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்பு இவர்கள் இருவருக்கும் திருமணம் நடந்து முடிந்தநிலையில்இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளது இரண்டாவது குழந்தைக்கு மூன்று வயது ஆகும் நிலையில் குழந்தை பிறந்தவுடன் கணவன் மனைவி இருவருக்கும் இடையே ஏற்பட்ட குடும்ப தகராறு கணவன் வீட்டை விட்டு வெளியே சென்றார் எங்கு சென்றார் என்று தெரியாத நிலையில் வெங்கடேசனை தேடி பலர் வீடுகளுக்கு வந்து சௌந்தர்யாவிடம் உனது கணவர் கடன் வாங்கினார் கொடுக்கவில்லை என்று கூறினர் அந்தப் பகுதியில் சுமார் 50 லட்சம் ரூபாய்க்கு மேல் கடன் வாங்கிய வெங்கடேசன் தலைமறைவான நிலையில் கடன் கேட்டு வருபவர்களுக்குசௌந்தர்யாபதில் அளித்து அனுப்பிய நிலையில் அந்த கிராமத்தை சேர்ந்த ஒரு பெண்ணை மணமுடித்த நெல்லிக்குப்பகுதியைச் சேர்ந்த ஆனந்தன் என்ற இளைஞர் மணலூர் கிராமத்திற்கு அடிக்கடி வந்து செல்லும் பொழுது சௌந்தர்யாவுடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது எது நாளடைவில் கள்ளக்காதலாக மாறி உள்ளது இந்த நிலையில் அடிக்கடி வீட்டில் மூன்று வயது இரண்டாவது மகள் இருக்கும் பொழுது சௌந்தர்யா வெங்கடேசன் உல்லாசம் அனுபவித்தது வந்ததாக கூறப்படுகிறது இந்த நிலையில் கடந்த 22 ஆம் தேதி சவுந்தர்யா தனது குழந்தையை அழைத்துக் கொண்டு திருச்சி செல்வதாக அவரது தாய் மாரிமுத்து என்பவருக்கு போன் மூலம் தகவல் கூறிவிட்டு சென்றுள்ளார் மேலும் சௌந்தர்யா வெங்கடேசன் எடுத்து வந்த காரில் தனது மகளை அழைத்துக்கொண்டு திருச்சிக்கு சென்றுள்ளார் அங்குள்ள பேருந்து நிலையம் பகுதியில் வெங்கடேசன் அப்பா என்று அழைக்க வேண்டும் என்று சௌந்தர்யா தனது 3 வயது மகளிடம் கூறியுள்ளார் அதற்கு அவரது மகள் மறுப்பு தெரிவித்ததால் வெறுப்பு அடைந்த சௌந்தர்யா தனது மூன்று வயது மகளை அடித்துள்ளார் மேலும் அங்குள்ள லாட்ஜ் ஒன்றில் புக் செய்து இருந்த வெங்கடேசன் அங்கு சௌந்தர்யா மற்றும் அவரது மகளை அழைத்துக் கொண்டு இரவு தங்கி உள்ளார் அப்பொழுது வெங்கடேசன் மூன்று வயது சிறுமியின் உடலின் பல இடங்களில் அடித்து உதைத்துள்ளார் மேலும் சௌந்தர்யா தனது மகளின் பிறப்புறுப்பில் சூடு வைத்துள்ளார் இந்த நிலையில் மறுநாள் அதிகாலை 3 வயது பெண் குழந்தையின் முகத்தில் மாஸ்க் அணிந்தபடி வீட்டில் விட்டுவிட்டு வெங்கடேசன் சென்றுள்ளார் இந்த நிலையில் சௌந்தர்யா தனது மகளை அந்த கிராமத்தில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு அனுப்பி உள்ளார் அங்கு மூன்று வயது சிறுமி தொடர்ந்து அழுததால் உணவு வழங்கிய பொழுது அவரது முக




கவசத்தை அங்கன்வாடி மையப் பொறுப்பாளர் அவிழ்த்தபொழுது உதடு பகுதியில் காயம் இருந்ததைபார்த்துசிறுமியிடம் விசாரித்துள்ளார் அப்போது நடந்தசம்பவத்தை சிறுமி கூறி உள்ளார் இந்த தகவல் அந்த கிராமத்தில் காட்டு தீ போல் பரவி உள்ளது இது பற்றி தகவல் அறிந்த சௌந்தர்யாவின் அம்மா சௌந்தர்யாவின் இளைய சகோதரி உடன் நேரில் வந்து பார்த்த சௌந்தர்யாவிடம் கேட்ட பொழுது சௌந்தர்யா அவரது தாய் மற்றும் சகோதரியை ஆபாச வார்த்தைகளால் திட்டி தாக்கியதாக கூறப்படுகிறது இது குறித்து சௌந்தர்யாவின் தாய் மாரிமுத்து உளுந்தூர்பேட்டை அனைத்துமகளிர்காவல் நிலையத்தில் புகார் செய்தார் அதன்பேரில் விசாரணை நடத்திய உளுந்தூர்பேட்டை அனைத்துமகளிர்காவல் நிலையபோலீசார்சம்பவத்திற்கான சாத்தியக்கூறு இருப்பதால்சௌந்தர்யா மற்றும் வெங்கடேசன் ஆகிய இருவரையும் கைது செய்து அவர்கள் மீது போஸ்கோ சட்டம் உட்பட 5 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து வெங்கடேசன் மற்றும் சௌந்தர்யா ஆகிய இருவரையும் கைது செய்து உளுந்தூர்பேட்டை குற்றவியல் நீதிமன்றத்தில் ஆச்சரியப்படுத்தி விழுப்புரம் சிறைகளுக்கு அனுப்பி வைத்தனர்.

# தூத்துக்குடியில் பெய்த கனமழையால் பல பகுதிகளில் தேங்கிய மழைநீரை வெளியேற்றப் பணிகளை அமைச்சர் கீதாஜீவன் ஆய்வு



தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக பெய்த கனமழையின் தாக்கம் காரணமாக ஆதிபராசக்தி நகர், தபால் தந்தி காலனி, புஷ்பா நகர், கதிர்வேல் நகர் உள்ளிட்ட பல்வேறு குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் தேங்கி இருந்தது. இதை வெளியேற்றும் பணிகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பணிகளை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் இன்று பி.என்.டி காலனி பகுதியில் நேரில் ஆய்வு செய்து, பின்னர் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

நேற்று முன்தினம் பெய்த கனமழையால் தூத்துக்குடி நகர்புறத்தில் மட்டும் 8 செ.மீ. மழைப்பொழிவு பதிவாகியுள்ளது. இதன் தாக்கமாக தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேக்கம் ஏற்பட்டுள்ளது. நீரை வெளியேற்றுவது சவாலான பணியாக இருந்தாலும், மக்கள் சாலையில் நடமாடும் அளவுக்கு தண்ணீர் குறைக்க மோட்டார் பம்புகள் மூலம் மழைநீரை வெளியேற்றப்படுகிறது.

மேலும், இரண்டு தீயணைப்பு வாகனங்கள் வ.உ.சி.யிலிருந்து ஒரு தீயணைப்பு வாகனம், வேளாண்துறையிலிருந்து டிராக்டர், தூத்துக்குடி மாவட்ட தீயணைப்பு இயந்திரம் ஒன்று,

விளாத்திகுளத்திலிருந்து 11 டிராக்டர்கள், மின்மோட்டார்கள், ஆயில் மோட்டார்கள், மாநகராட்சியின் பம்ப்செட்டுகள் ஆகிய அனைத்தையும் பயன்படுத்தி மழை நீரை அகற்றும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது, மக்களின் இயல்பு வாழ்க்கை விரைவில் திரும்பும் வகையில் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுத்து வரப்படுகின்றன என்று அமைச்சர் கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.



# தூத்துக்குடியில் மழைநீர் சூழ்ந்துள்ள பகுதியில் கனிமொழி எம்.பி. நேரில் ஆய்வு

தூத்துக்குடியில் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அண்மையில் பெய்துவரும் கனமழையின் காரணமாக, மாநகராட்சிக்கு உட்பட்ட ரஹ்மத் நகர், ஆதி பராசக்தி நகர், மாவட்ட தொழில் மையம் ஆகியப் பகுதிகளில் திமுக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, வெள்ளநீர் தேங்கி இருக்கும் இடத்தை நேரில் பார்வையிட்டார். பின்னர், மோட்டார் பம்புகள் மூலம் வெள்ளநீரை வெளியேற்றும் பணிகள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். மேலும், அப்பகுதி மக்களிடம் குறைகளையும் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது, தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதா ஜீவன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் பிரியங்கா, அரசு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# ஈரோடு காங்கிரஸ் மாவட்டத் தலைவர் தேர்தல்: ஜே.ஆர். லோபோ முன்னிலையில் வேட்பு மனு தாக்கல்



காங்கிரஸ் கட்சியின் பார்வையாளரும், முன்னாள் ஐஏஎஸ் அதிகாரியும், மங்களூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ஜே.ஆர்.லோபோ, ஞாயிற்றுக்கிழமை ஈரோட்டில் கட்சித் தொண்டர்களிடையே உரையாற்றி, ஈரோடு மாவட்டத் தலைவர் நியமனம் குறித்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து, மறுதினம் ஈரோடு காங்கிரஸ் கட்சியின் அலுவலகமான ஜவகர் இல்லத்தில் மாவட்டத் தலைவர் பதவிக்கான வேட்பு மனு தாக்கல் செய்யும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில், தற்போதைய மாவட்டத் தலைவரான திருச்செல்வம் மற்றும் நான்காம் மண்டலத் தலைவர் ஜாபர் சாதிக் உட்படப் பல முக்கிய நிர்வாகிகள் தங்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

தாக்கல் செய்யப்பட்ட மனுக்களைப் பரிசீலனை செய்த பின்னர், ஈரோடு மாவட்டத்தின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க உள்ளதாகக் கட்சித் தலைமை தெரிவித்துள்ளது. இந்த வேட்பு மனு தாக்கல் நிகழ்ச்சியின் போது காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



ஈரோடு வடக்கு மாவட்ட திமுக சார்பில் கோபிசெட்டிப்பாளையம், குள்ளம்பாளையத்தில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு நவம்பர் 28,29,30 ஆகிய தேதிகளில் நடக்கவிருக்கும், மாபெரும் தேசிய அளவிலான பெண்கள் கபாடி போட்டிக்கான அழைப்பிதழ் மலரை வீட்டு வசதி துறை அமைச்சர் சு. முத்துசாமிக்கு திமுக மாவட்ட செயலாளர் நல்லசிவம் நேரில் சந்தித்து வழங்கினார். உடன் கோபி சேர்மன் நாகராஜ் உள்ளார்.



தமிழ்நாடு வல்கனைசிங் உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் நல சங்கம் சார்பில் ஈரோடு மாவட்ட பஞ்சர் கடை உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் இணையும் சங்க ஆலோசனைக் கூட்டம் ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் அடுத்த வள்ளியம்பாளையத்தில் நடைபெற்றது.இந்த ஆலோசனைக் கூட்டமானது மாநிலத் தலைவர் எஸ். முத்துராஜ் தலைமையில் மாநில பொதுச் செயலாளர் டி. இளையராஜா, மாநில பொருளாளர் காண்டீபன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் கரட்டூர் ஆர்ச் அருகில் தனியார் நிறுவனத்தின் பால் மற்றும் பால் பொருட்கள் அங்காடி திறப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு முன்னாள் அமைச்சரும், கோபிசெட்டிபாளையம் சட்டமன்ற உறுப்பினருமான கே.ஏ. செங்கோட்டையன் கலந்து கொண்டு முதல் விற்பனையை துவக்கி வைத்தார். இந்த விழாவில் நிறுவன மேலாளர்கள், கடை உரிமையாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் கரட்டூர் ஆர்ச் அருகே உள்ள ஈரோடு வடக்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சி அலுவலகத்தில் கூட்டுறவு பிரிவு மாவட்ட நிர்வாகிகள் அறிமுக கூட்டமானது மாவட்டத் தலைவர் அப்புசாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டுறவு பிரிவு நிர்வாகிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு கூட்டுறவு பிரிவின் வருங்கால நிகழ்வுகள் குறித்து விவாதித்தனர்.உடன் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள் உள்ளனர்.

# "Misfit For Army": Court Raps Christian Officer Who Didn't Enter Gurdwara



*New Delhi:*

*The Supreme Court on Tuesday criticised a Christian Army officer fired for refusing to enter a gurdwara (to perform a puja) and labelled him a "cantankerous man" and a "misfit", and backed the armed forces' decision to eject him for failing to respect his fellow (Sikh) soldiers' faith.*

*"What kind of message is he sending? Gross indiscipline by an Army officer. He should have been terminated. This kind of cantankerous persons deserves to be in the military?" a bench led by the new Chief Justice Surya Kant said.*

*"He may be an outstanding officer but he is a misfit for the Indian Army. The amount of responsibilities our forces have at this time... this is not what we want to entertain."*

*Formerly a Lieutenant in the 3rd Cavalry Regiment, Samuel Kamalesan was sacked for defying military discipline; he refused a command from his superior officer to enter the sanctum sanctorum of a temple to conduct a puja. He argued it would affect his monotheistic Christian faith.*

*In May the Delhi High Court re-affirmed the Army's decision, which was that Kamalesan "kept his religion above a lawful command from his superior", and ruled, "This is clearly an act of indiscipline."*

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.